**<u>தொழில் நுட்பக் கல்வித் துறை</u>**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தொழில் நுட்பக் கல்வி ஆணையர்,<br>தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,<br>சென்னை 600 025. | முதல்வர்கள்,<br>அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்பு பயிலகங்கள் |

**<u>கடித எண். 51537/ஐம்2/சிடிசி/2022 நாள். 02 .01.2023</u>**

ஐயா/அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள்: | தொழில் நுட்பக் கல்வித் துறை –வேலைவாய்ப்பு பிரிவு – TATA ELECTRONICS நிறுவனத்துடன் இணைந்து சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் – பட்டயபடிப்பு முடித்த மாணவர்களை அதிகளவு பங்கு பெற செய்தல் – தொடர்பாக. |
| பார்வை: | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையிலிருந்து பெறப்பட்ட கடித எண்.வே.த./20481/2022, நாள்: 20.12.2022. |

*****

பார்வையில் காணும் கடிதத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வேலைவாய்ப்பு பிரிவு வாயிலாக பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், தற்போது TATA ELECTRONICS நிறுவனத்துடன் இணைந்து சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளதாகவும், கடந்த மூன்று வருடங்களில் (2020, 2021, 2022) படித்துமுடித்த மாணவர்கள் அதிகளவு பங்குபெறச் செய்து பயனடையும் வகையில் பணியமர்த்தல் பிரிவு அலுவலர்களுக்கு, உரிய அறிவுரைகள் வழங்குமாறும், வழங்கப்படும் அறிவுரை நகலை இவ்வியக்ககத்திற்கு அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பாக, அனைத்து முதல்வர்களும், நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையிலிருந்து பெறப்பட்ட கடிதம் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இணைப்பு: வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையிலிருந்து
பெறப்பட்ட கடிதம்

3/1/23

தொழில் நுட்பக் கல்வி ஆணையருக்காக

சு.த
3/1/23

நகல்
இயக்குநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை,
இயக்ககம், கிண்டி,
சென்னை–32.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
(வேலைவாய்ப்பு பிரிவு)

அனுப்புநர்

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
இயக்ககம், கிண்டி,
சென்னை – 32.

051537

பெறுநர்

இயக்குநர் ,
தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
53, சர்தார் படேல் சாலை ,
கிண்டி ,சென்னை– 600 025.

கல்வி இயக்ககம்
22 DEC 2022
025

Not-H
1/1

கடித எண்.வே.த. /20481/2022, நாள்: 20. 12. 2022

அய்யா,

பொருள்: வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்பு பிரிவு –TATA ELECTRONICS நிறுவனத்துடன் இணைந்து சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் – பட்டயபடிப்பு முடித்த மாணவர்களை அதிகளவு பங்கு பெற செய்தல் – தொடர்பாக.

பார்வை: TATA ELECTRONICS நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட மின்னஞ்சல் நாள் : 16.12.2022.

*******

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வேலைவாய்ப்பு பிரிவு வாயிலாக பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன . அவ்வகையில், தற்போது TATA ELECTRONICS நிறுவனத்துடன் இணைந்து சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது .

இந்நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ள பணியிடம் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

22/12/22

| | |
|---|---|
| தொழிற்சாலை அமைய பெற்ற இடம் | ஓசூரில் உள்ள டாடா எலக்ட்ரானிக்ஸ் தனியார் நிறுவனம் . |
| பணியின் பெயர் | தொழில்பழகுநர். |
| வயது மற்றும் கல்வி தகுதி | வயது 18– க்கு மேல் உள்ளவர்கள்,<br><br>2020, 2021 மற்றும் 2022 ஆம் கல்வி ஆண்டில் டிப்ளமோ (Diploma) தேர்ச்சி பெற்றவர்கள். |
| அத்தியாவசிய பயிற்சி | தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 1 வருட காலம் பயிற்சி வழங்கப்படும். |

| | |
|---|---|
| சலுகைகள் | பாதுகாப்பான பணி சூழல் மற்றும் தேவையான வசதிகளுடன் கூடிய தங்குமிடம், உணவு மற்றும் போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படும்.<br><br>துவக்கநிலை ஊதியம் ரூ.11,500/- |

இப்பணிக்காக நடத்தப்படும் இவ்வேலைவாய்ப்பு முகாமில் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தனியார் மற்றும் அரசு தொழில்நுட்ப கல்லூரிகளில் கடந்த மூன்று வருடங்களில் (2020, 2021, 2022) படித்துமுடித்த மாணவர்கள் அதிகளவு பங்குபெறச் செய்து பயனடையும் வகையில் பணியமர்த்தல் பிரிவு அலுவலர்களுக்கு (Placement Cell – Officers) உரிய அறிவுரைகள் வழங்குமாறும், வழங்கப்படும் அறிவுரை நகலை இவ்வியக்ககத்திற்கு அனுப்புமாறும் கேட்டுக் கொள்கிறேன் .

தங்கள் உண்மையுள்ள,

20/12/22

இயக்குநர்

19/12/22

19/12/2022

**நகல்**

மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு),
மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகம்,
சென்னை / திருச்சி / கோவை / மதுரை/ சேலம்/ திருநெல்வேலி.